[9th August 1966

Gratuity rules

* 253 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to amend the gratuity rules for the State Government servants, to be in conformity with those applicable to the Union Government servants; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The matter is under the consideration of the Government.

(*b*) Does not arise.

திரு. வை. சங்கரன் : இப்போதுள்ள நிலையில் மத்திய அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குள்ள க்ராச்யூட்டி ரூல்ஸுக்கும் நம் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குள்ள க்ராச்யூட்டி ரூல்ஸுக்கும் என்னென்ன வேறுபாடுகள் இருக்கின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The maximum ceiling fixed by the Government of India for payment of gratuity is Rs. 10,000 or 12 months' pay whichever is less. But this is restricted for the State Government employees to Rs. 2,400 or 12 months' pay whichever is less.

Tagore Centenary Memorial Theatre

* 254 *Q.*—SRI M. KALYANASUNDARAM :
SRI SAW GANESAN :
SRI A. K. SUBBIAH :
SRI K. A. MATHIALAGAN : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) when the construction of Tagore Centenary Memorial Theatre at Madras was commenced;

(*b*) the present stage of construction;

(*c*) the total amount of expenditure incurred so far in respect of the construction;

(*d*) the extent of Central assistance obtained so far; and

(*e*) the particulars of the estimate of the Theatre?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) In March 1961.

(*b*) Pile foundations for the Auditorium block as well as the Stage block have been completed and the construction of the dressing block has been completed.

(*c*) Rs. 6·02 lakhs.

(*d*) Rs. 2·5 lakhs.

9th August 1966]

(e) The original estimate of Rs. 9 lakhs was subsequently revised as Rs. 15·32 lakhs taking into account the cost of furnishing, fabrics, sculptural and painting works, etc. Now the estimate has to be revised to include additions like store shed, Road, Car Park, etc. It may come to Rs. 22 lakhs.

திரு. சா. கணேசன் : பிற மாநிலங்களில் எல்லாம் தாகூர் மெமோரியல் ஹால் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. இங்கு இதைக் கட்டும்போது தியேட்டர் கட்டாமல் மேக்-அப் ரூம், க்ரீன் ரூம் மட்டும் கட்டி, அவை செம்மையாக செய்யப்பட்டிருந்தும் நாடக அரங்கு இல்லாமையினால் அந்த இடங்கள் தீய அல்லது கொடிய காரியங்களுக்கு இப்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்ற செய்தி அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா? அப்படியானால் அதன் மீது கவனம் செலுத்தி, தக்க பாதுகாப்புக் கொடுத்து வேலையைத் துரிதமாக நடத்த முடிவு செய்ய வழிவகை வகுத்திருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தாமதத்திற்கு முக்கிய காரணம் நிதி நிலைமை. எஸ்டிமேட் அதிகப்பட்டிருக்கிறது. இதைத் தொடர்ந்து வேலை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது. ஓரளவு வேலையும் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் கொஞ்சம் நன்கொடை வசூலித்து இதைப் பூர்த்தி செய்யவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : தாகூர் நினைவுச் சின்னங்கள் உலகில் பல பகுதிகளிலும் நிறுவப்பட்டிருக்கின்றன. அவற்றை சமீபத்தில் ஐரோப்பா சென்றிருக்கும் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் பார்வையிட்டிருப்பதாக செய்தி வந்தது. உலகில் உள்ள அப்படிப்பட்ட நினைவுச் சின்னங்களின் மாதிரிகளைத் தருவித்து அவற்றை அரங்கில் காட்சியாக வைக்க இதோடு சேர்த்து ஏற்பாடு செய்வார்களா? அல்லது ஒரு பகுதியில் அந்த மாதிரிகளை கட்டட வடிவில் அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தாகூர் சென்டினரி தியேட்டரை பொறுத்தவரையில் முன்பே ப்ளான் தயாரிக்கப்பட்டிருக்கிறது. எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டிருக்கிறது. எஸ்டிமேட் ரிவைஸ் செய்யப்பட்டிருக்கிறது. முடிப்பது தான் பிரச்னை.

திரு. சா. கணேசன் : இந்த அரங்கம் இந்தியாவின் மிகப் பெரும் கலைஞராகிய தாகூரின் பெயரால் கட்டப்படுவதால் கலைப்பண்பாடுகள், அழகு, வசதி போன்ற அனைத்தும் ஒருங்கே பொருந்தியிருக்கக்கூடிய எண்ணத்தோடு பிற நாடுகளுக்கும் சென்று பல கட்டடங்களைக் கணித்து வரும்படி இதற்காக ஒரு பொறியியலார், என்ஜினியர் அனுப்பப்பட்டாரா? அவர் அனுப்பப்பட்டு அதன் மீது ப்ளான் போடப்பட்டு அந்த வேலைகள் நிறைவேற்றப்பட்டதா அல்லது நிறைவேற்றப்படுகிறதா, எவ்வளவு காலத்திற்குள் அது முடியும்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு ப்ளான் எல்லாம் முடிவாகிவிட்டது. எடுத்துக் கட்ட பணம் வேண்டும், கட்டி முடிக்க வேண்டும். அவ்வளவுதான்.